**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

ஊரகக் குடிநீர் திட்டங்கள் - குடிநீர் பிரச்சனையை தீர்க்க மாவட்ட அளவில் அரசு அதிகாரிகள் குழு அமைத்து ஆணையிடப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

அரசு ஆணை (நிலை) எண். 168 நாள் 2.8.96

ஆணை:

கடந்த 11 .6.96 மற்றும் 12.6.96ம் தேதிகளில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் பற்றிய விவாதத்தின்போது பெரும்பாலான மாவட்ட ஆட்சித் தலவைர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடன் அன்றாட தொடர்பு இருப்பதன் அவசியத்தை பற்றியும் பெரும்பாலான வாரிய அதகிாரிகள் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் கலந்தாலோசித்து பணியாற்ற வேண்டும் என்ற கருத்தைக் கூறினார்கள். இந்தப் பிரச்சனையைப் போக்குவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என அரசு கருதியது.

2. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழு அமைத்து. இந்தக் குழுவில் கீழ்க்கண்ட அதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்க அரசு முடிவெடுத்து ஆணையிடுகிறது. 6

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | உறுப்பினர் |
| 2 | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சி அபிவிருத்தி) (P.A. (P.D.) to Collector) | உறுப்பினர் |
| 3 | மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் (RDMA) | உறுப்பினர் |
| 4 | பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர் (Director of Town Panchayats) | உறுப்பினர் |
| 5 | நிர்வாக பொறியாளர்/ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (EE/TWAD Board) | உறுப்பினர் செயலர் |

| | | |
|---|---|---|
| 6 | மண்டலப் பொறியாளர்/<br>கண்காணிப்புப் பொறியாளர்<br>தமிழ்நாடு மின்சார வாரியம்<br>(Divisional Engineers/SE:TNEB)<br>(who has jurisdiction the District) | உறுப்பினர் |

3. மேற்கண்ட குழு 15 நாட்களுக்கு ஒருமுறை கூடி கீழ்க்கண்ட பொருட்களை ஆய்வு செய்து முடிவெடுக்கும்.

1. கூட்டுக் குடிநீர் மற்றும் விசை பம்பு திட்டங்களின் புனரமைப்பு

2. நடைபெற்று கொண்டு வரும் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்

3. நடைபெற்று கொண்டு வரும் பேரூராட்சி. நகராட்சி குடிநீர்த் திட்டங்கள்

4. புதிதாக புலனாய்வில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டம். பேரூராட்சி மற்றும் நகராட்சி குடிநீர் திட்டங்கள்

5. முடிக்கப்பெற்ற திட்டங்களுக்கு மின்சார வசதி அளிப்பதில் உள்ள தாமதங்கள்

6. குடிநீர் திட்டங்கள் பராமரிப்பிற்கு தேவையான உபகரணங்கள், உதிரி பாகங்கள், இருப்பு தேவை ஆகியவை

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி.
அரசு செயலாளர்

பெறுநர்

ஆணையர். வருவாய் நிர்வாகம், சென்னை.5
தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை.2
ஆணையர், நகராட்சி நிர்வாக இயக்ககம், சென்னை5
ஆணையர், நகரப் பேரூராட்சிகள், சென்னை,108
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை5
ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை, பனகல் கட்டிடம், சென்னை 15
எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
நகல் வருவாய் / ஊரக வளர்ச்சித்துறை / மின்துறை சென்னை 9
எல்லாக் குடிநீர் வழங்கல் பிரிவுகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்